மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி இவைகளை யெல்லாம் அரசு பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையை வழங்குகிற போது மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கு வைத்துக் கொண்டு வழங்குகிறீர்களா ? அல்லது அவர்களுடைய குடும்பங்களின் பொருளாதார பின்னணியை வைத்து பார்த்துக் கொடுக்கிறீர்களா ? அப்படி என்று சொன்னால், அந்த மாணவர்களுடைய குடும்பச் சூழ்நிலை மிகவும் ஏழ்மையாக இருந்தால் 150 ரூபாய் என்பதைக் கூட இன்னும் உயர்த்திக் அதை இந்த ஆண்டே கொடுக்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவர்களின் குடும்ப சூழ்நிலையை அடிப்படையாக வைத்துத்தான் இந்த உதவித் தொகையை நாம் வழங்குகிறோம் என்பதோடு மட்டும் அல்ல, அரசைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த விடுதிகளில் பயிலுகிற மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்கவும் தனியாக உதவித் தொகையை அளிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களின் அடிப்படையில் அதனை பரிவோடு அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

சின்னதாராபுரத்தில் யணைக்கும் நிலயம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா என் 625.—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர் வட்டம், சின்னதாராபுரத்தில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ தமிழகத்தில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவுவதற்கான ஊர்களின் முன்னுரிமைப் பட்டியல் அரசினரால் அரசு ஆணைஎண் 2819, உள்துறை, நாள் 18–10–1979 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதில் சின்னதாராபுரம் இடம் பெறவில்லை. பட்டியலில்புதியதாக ஒரு ஊரைச் சேர்ப்பதாயின் அந்த ஊரின் மக்கள்தொகை, தீ விபத்து அபாயங்கள் குறித்து பரிசீலனை செய்வதல்லாமல் அவ்வூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் எந்த தீயணைப்பு நிலையமும் இல்லாமல் இருக்கவேண்டும். ஏற்

1982 மார்ச் 24]

கெனவே 25 கி.மீ.தொலைவிற்குள் கரூர் வட்ட தலைமையகத்தில் ஓர் முழுமையான தீயணைப்பு நிலையம் இயங்கி வருவதால், சின்ன தாராபுரத்தின் தேவைகளை கரூர் தீயணைப்பு நிலையத்திலும் பூர்த்தி செய்து கொள்ளலாம். முன்னுரிமைப் பட்டியலிலுள்ள எல்லா ஊர்களிலும் புதியதாக தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்ட பின்னர் சின்ன தாராபுரத்தில் அவசிய நிலைமைக்கேற்ப எடுத்துக் கொள்ளப்படும்.

ஈட்டி பாலா போன்ற ஆயுதங்சளை வைத்துக்
கொள்வதற்கான உரிமம்.

வினா எண் 626—திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் : மற்றும்திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈட்டி, பாலா போன்ற ஆயுதங்கள் வைத்துக் கொள்ள லைசென்ஸ் பெற வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) படைக்கல விதிகள் 1962 இன் அட்டவணை 1 (Schedule—) இன் பகுதி V இல் குறிப்பிடப்பட்டுள்ள படைக் கருவிகள் கல மற்றும் வெடி மருந்துகளின் பட்டியலின்படி 9 அங்குல நீளம் மற்றும் 2 அங்குல அகலத்திற்கு மேற்பட்ட குத்து பாகமுள்ள, வீட்டு, விவசாய, விஞ்ஞான மற்றும் தொழில் உபயோகங்களுக்கானவாறு செய்யப்படாத, ஈட்டி, (நீளக்) கத்தி மற்றும் இதர கூர்முனைக் கருவிகள், ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள், உயிருக்கு ஆபத்தானவை என குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கருவிகளை வைத்துக் கொள்ளவும், பயன்படுத்தவும், படைக்கலச் சட்ட விதிகளின்படி உரிமம் பெற வேண்டும்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த ஈட்டி, பாலா போன்றவற்றை சாதாரணமாக கிராமங்களிலே எல்லோரும் வைத்திருப்பார்கள். வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சப் போகின்ற போது பாம்பு போன்றவை எதிர்படுகின்றபோது எட்டி நின்று எறிவதற்கு இந்த ஈட்டி பாலா போன்றவை வசதியாக இருக்கும். மேலும் உழவர்கள் உபயோகப் படுத்துகின்ற கலப்பையினுடைய கொளு ஈட்டி மாதிரித்தான் இருக்கும். ஆகவே கொல் பட்டறையிலே அதைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது கூட அவர்கள் ஈட்டிதான் தயாரிக்கிறார்கள் என்று கருதப்படுகின்ற நிலைமை ஏற்பட்டு அதனால் அவர்கள் பாதிக்கப்படக்கூடும். ஆகவே அந்த நிலைமையை மாற்றி இந்த ஈட்டி, பாலா போன்ற ஆயுதங்கள் வைத்துக் கொள்வதற்கு லைசன்ஸ் பெற வேண்டும் என்ற அந்த விதி ரத்து செய்யப்படுமா?